சிமெண்ட் இறக்குமதி

*வினா எண். 281—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1979–1980, 1980–1981 ஆம் ஆண்டுகளில் டான்செம் எத்தனை டன் சிமெண்ட் இறக்குமதி செய்தது?

(ஆ) என்னவிலைக்கு அதை வாங்கியது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 1979–80 மற்றும் 1980–81ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தால் நேரடியாக சிமெண்ட் ஏதும் இறக்குமதி செய்யப்படவில்லை. அவ்வாண்டுகளில் சென்னை, தூத்துக்குடி மற்றும் பாண்டிச்சேரி துறைமுகங்களில் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களின் கையாளுதல் மற்றும் விநியோகிக்கும் (Handl ng-c m-D strib tion Agents) ஏஜெண்டுகளாகவே தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் செயலாற்றியது.

(ஆ) மத்திய அரசின் ஆணைப்படி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் (S.T.C.) என்ற மத்திய அரசு நிறுவனத் திடமிருந்து சிமெண்ட் அவ்வப்போது அமுலில் இருந்து வந்த கட்டுப்பாடு விலைக்கு வாங்கி அதே விலைக்கு சிமெண்ட் கட்டுப்பாடு அலுவலர் ஆணைப்படி சிமெண்ட் விநியோகிக்கப்பட்டது. இதில் கையாளுதல் மற்றும் விநியோகிக்க கொடுக்கப்பட்ட ஊதியம் மட்டும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தைச் சேரும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் டான் செம் மூலம் நமக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் குறிப்பிலே 1979–80—ஆம் ஆண்டுகளில் 1980–81—ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்யப்பட்ட தாக குறிப்பு இருக்கிறதே அதைப் பார்த்து விட்டுத்தான் கேள்வி போட்டேன். ஆனால், அமைச்சர் அவர்கள் பதில் தருகின்ற நேரத்தில் அப்படி இறக்குமதி செய்யப்பட வில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும் நான் அறிய விரும்புவது, எவ்வளவு சிமெண்ட் இறக்குமதி, செய்யப்பட்டது, என்ன விலைக்கு விற்கப்பட்டது கடந்த ஆண்டு இறக்குமதி செய்யப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் சிமெண்ட் இறக்குமதி செய்ததாக எந்தக்

1983 பிப்ரவரி 14] (மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு)

குறிப்பு தெரிவிக்கிறது என்று புரியவில்லை. ஒருவேளை சமீபத்தில் அடிபடுகிற பேச்சை நினைவில் வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்களோ என்று நினைக்கிறேன். 1982 ஆம் ஆண்டுக்கு முன்னால் எந்த மாநில அரசும் அல்லது சிமெண்ட் கார்ப்பரேஷன் தனியாக இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. மத்திய அரசு இறக்குமதி செய்து, தமிழக சிமெண்ட் கார்ப்பரேஷன் 'ஹான்ட்லிங் அண்ட் டிஸ்ட்ரிபியூஷன்'—கையாளுதல் மற்றும் விநியோகம் செய்தல்—உரிமையை மட்டும் பெற்றிருந்தது. அதற்கான ஊதியத்தை இந்த கார்ப்பரேஷன் பெற்றுக்கொண்டிருந்தது. 1982—ல் சிமெண்ட் பற்றாக்குறை அதிகமாக இருந்த காரணத்தால் நம்முடைய எஸ். டி. சி. மட்டுமல்ல, மற்ற மாநில அரசுகளும் சிமெண்ட் இறக்குமதி செய்துகொள்ளலாம் என்ற அனுமதியை மத்திய அரசு கொடுத்து, எல்லா மாநிலங்களிலும் வெளிநாடுகளிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்யப்பட்டது. அந்த அடிப்படையிலே 1982—ல் நாம் 2 இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி செய்ய வட கொரியாவுக்கு ஆர்டர் கொடுத்தோம். இதுவரை அங்கிருந்து 40,000 டன் சிமெண்ட் வந்திருக்கிறது. மற்றவை இன்னும் இரண்டு மாதங்களில் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு நமக்கு லெவி சிமெண்ட் ஒரு காலாண்டுக்கு—அதாவது 3 மாதங்களுக்கு—1.25 இலட்சம் டன் தந்துகொண்டிருக்கிறது. நமக்கு 4 அல்லது 5 இலட்சம் டன் தேவைப்படுகிறது. நம்முடைய தேவையை நிறைவு செய்துகொள்ள, பல்வேறு அரசுப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற இந்த 2 இலட்சம் டன்னுக்கு மேலும் தேவைப்படும் என்றால் மாநில அரசு மேலும் இறக்குமதி செய்யும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இந்த 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் எஸ். டி. சி. மூலமாக வாங்கி விநியோகம் செய்ய மத்திய அரசால் கொடுக்கப்பட்ட சிமெண்ட் எத்தனை டன் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்த ஆண்டுகளில் நாம் நேரடியாக செய்யவில்லை என்பதை ஏற்கெனவே சொன்னேன். மத்திய அரசு கொடுத்தது. 1979–80 ஆம் ஆண்டில் 3,49,950 டன் ; 1980–81 ஆம் ஆண்டில் 5,14,863 டன் ; 1981–82 ஆம் ஆண்டில் 3,06,250 டன். அவை எஸ். டி. சி. மூலம் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்---விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதை குறிக்கும்.]